*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.15/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.சிவக்குமார் த/பெ. பழனிவேல்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **15.05.2024.**

துவக்க நேரம் 02.40

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது தேவியாகுறிச்சியில் குடியிருந்து, விவசாயம் வேலை செய்து வருகிறேன். தலைவாசல் மும்முடியில் உள்ள சேகர் காம்பளக்ஸ் தான் எனது வீடு உள்ளது. கடந்த 18.03.2021ம் தேதி இரவு TN 54 Z 8442 என்ற பதிவெண் கொண்ட எனது TVS XL இருசக்கர வாகனத்தை தலைவாசல் மூடிமுடியில் உள்ள சேகர் காம்பளக்ஸ் பின்புறம் நிறுத்திவிட்டு, எனது வீட்டிற்கு சென்றேன். பிறகு மறுநாள் காலை அதிகாலை 05.00 மணியளவில் நான் வெளியே வந்து பார்த்த போது, எனது வீட்டிற்கு வெளியே நிறுத்தி வைத்திருந்த வண்டியை காணவில்லை. அன்று மதியம் வரை அக்கம் பக்கம் தேடி பார்த்தும் வண்டி கிடைக்காததால் தலைவாசல் காவல் நிலையத்திற்கு சென்று 19.03.2021ம் தேதி மதியம் சுமார் 01.00 மணியளவில் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனது வீட்டிற்கும் சேகர் காம்பளக்ஸ்-க்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 3 கி.மீ இருக்கும். எனது தம்பி வீடு சேகர் காம்பளக்ஸில் தான் உள்ளது. சேகர் காம்பளக்ஸில் எதற்காக எனது வண்டியை நிறுத்தினேன் என்றால் தம்பி மனைவி எனது இருசக்கர வாகனத்தை கேட்டிருந்ததால் அவரிடம் கொடுத்தேன். போலீசார்

எப்போது எனது வண்டி கிடைத்துவிட்டதாக சொன்னார்கள் என்றால் நான் புகார் கொடுத்த மறுநாள் கிடைத்துவிட்டதாக சொன்னார்கள். வண்டியை யார் திருடினார்கள் என்று சொன்னார்களா என்றால் இல்லை. எனது இருசக்கர வாகனம் எவ்வாறு தொலைந்தது என்று எனக்கு நேரடியாக தெரியவில்லை என்றால் சரிதான்.

முடிவு நேரம் 02.55

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.